தெரு விளக்குகளுக்குத் திட்டம் தீட்டி 1.7 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மின்சாரத் துறைக்கு அனுப்பப்பட்டு, மின்சாரத் துறை இந்த போரம்பட்டு ஊராட்சியில் மின்கட்டணப் பாக்கி உள்ளதால், அந்தப் பணி துவங்காமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஊராட்சிக்கு ரூ.31 இலட்சம் ஒதுக்கீடு செய்து சில பணிகள்—சின்ன பேராம்பட்டு—தாதன் கொட்டாய் சாலை, கொய்யாலி வட்டம்— கீழ்மத்தூர் சாலை, சின்ன பேராம்பட்டு-காடயாம்பள்ளம் சாலை—பாதியிலேயே நிற்கின்றமையால் மேற்படி சாலைகளின் பணிகளை முழுமையாக முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து இந்த நிதி ஆண்டிலேயே முடித்துக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அறிந்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 313, திருமதி வி. சிவகாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

313—

தனி மாவட்டம்

***8066—திருமதி வி. சிவகாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தாராபுரம், பழனி, உடுமலைப்பேட்டை மற்றும் காங்கேயம் வட்டங்களை உள்ளடக்கி தனி மாவட்டம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

திருமதி வி. சிவகாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2002 மே 8]

இன்றைய மன்றக் குறிப்பேடு நாளைய வரலாறு. என்னுடைய தொகுதி தாராபுரம், கொங்கு நாட்டைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு காலத்திலே செயல்பட்டு வந்த நகரம். அந்த தலைநகரத்திலே காங்கேயம், பழனி, உடுமலைப்பேட்டை, தாராபுரம் போன்ற 4 தாலுகாக்களையும் கொண்டு ஒரு மாவட்டம் அமைக்க வேண்டும் என்ற நோக்கம் பல ஆண்டு காலமாகப் பேசப்பட்டு வருகிறது. கொன்று குவித்திடும் கொடுமுடிகூட அன்னையின் பார்வை பட்டால் பச்சிளம் குழந்தையாகிவிடும். (மேசையைத் தட்டும் ஒலி) அன்புமிகு அன்னை அவர்களுடைய ஆட்சியிலே—நாளை ஆயிரம் காலத்துக்குப் பின்புகூட நாட்டை ஆளும் தமிழ்கூறும் நல்லோர்கள், அம்மாவினுடைய கரத்தில் பதிந்த அந்த எழுத்தாணியும், கண்ணில் அணிந்திருக்கும் அந்தக் கண்ணாடியும், ஆடை, அணிகலன் அத்தனையையும் துறந்தார் என்று ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்புகூட இந்த நாட்டை ஆளுவோர்கள்-- தாராபுரத்தை ஒரு மாவட்டமாக அமைத்தால், நம்முடைய தமிழகத்தில் உள்ளவர்கள் என்னுடைய தொகுதி சார்பாக இருக்கும் எனது தொகுதி மக்கள் மட்டுமல்லாமல் மாவட்டத்தில் இருக்கும் 4 தாலுகா மக்களும் நாளைக்கு, ஆயிரம் காலத்துக்குப் பின்புகூட பாராட்டுவார்கள். அம்மா அவர்கள் அணிகலன்கள் அணிவதில்லை; ஒரு பெண் அணிகலனை துறப்பது என்றால், அது சாதாரண விஷயமல்ல; அவர்கள் அத்தனையையும் துறந்து இன்றைக்கு புத்தர் போல காட்சி அளிக்கும் அன்னையின் ஆட்சியிலே இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரத்தை தலைநகரமாகக் கொண்டு ஒரு புது மாவட்டம், தனி மாவட்டம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். உங்களுடைய கோரிக்கையிலே தாராபுரம், ஈரோடு மாவட்டத்திலும், பழனி, திண்டுக்கல் மாவட்டத்திலும், உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர் மாவட்டத்திலும், காங்கேயம், ஈரோடு மாவட்டத்திலும் உள்ளது. ஒரு மாவட்டத்தைப் பிரிப்பது என்றால் குறைந்தது 20 இலட்சம் மக்கள் தொகை இருக்க வேண்டும். ஆனால் மூன்று மாவட்டங்களிலிருந்து தனித்தனி வட்டங்களை எடுத்து, புதிதாக ஒரு மாவட்டம் ஆரம்பிக்க வேண்டுமென்று நீங்கள் கூறுகிறீர்கள். இதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக நீங்கள் கூறிய மூன்று

மாவட்டங்களிலிருந்தும் 3 தாலுகாக்களை பிரிக்க முடியாது என்று சொல்லி, மேலும் உங்களுடைய கோரிக்கையை பரிந்துரை செய்ய வேண்டுமென்றால், மக்கள் தொகை அடிப்படையிலே 20 இலட்சம் மக்கள் தொகை அங்கே இல்லை என்று சொல்லி, சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொல்லி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஊருக்குப் போகிறீர்களா? வினா எண் 311, திரு. த ஆறுமுகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

314—

வாகனப் போக்குவரத்து

***18876—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை முத்தமிழ் நகர், கண்ணதாசன் நகர், திருவொற்றியூர் (வடசென்னை) நகரப்பகுதிகளில் துறைமுகம் மற்றும் பல இடங்களுக்குச் செல்லும் கனரக வாகனங்களால் போக்குவரத்து பாதிப்பு நிகழ்வதால் அதனைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை முத்தமிழ் நகர், கண்ணதாசன் நகர், திருவொற்றியூர் ஆகிய வடசென்னை நகரப் பகுதிகளில் துறைமுகம் மற்றும் பல இடங்களிலிருந்து செல்லும் கனரக வாகனங்களினால் போக்குவரத்து பாதிப்பு நிகழ்வதை அரசு கவனத்தில் கொண்டு, காவல் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளின் உதவியுடன் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜி.எஸ்.டி. சாலையையும் எண்ணூர் எக்ஸ்பிரஸ் சாலையையும் இணைக்கும் 100 அடி உள்வட்ட சாலைப் பணிகள் முடிவடைந்து பயன்படுத்தப்படும்போது மேற்கூறப்பட்ட இடங்களில் போக்குவரத்து பாதிப்பு ஏற்படாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடசென்னை பகுதியில் அமைந்துள்ள இராயபுரம், ஆர்.கே.நகர் பகுதியிலுள்ள, குறிப்பாக திருவொற்றியூர் பகுதியில் அமைந்துள்ள

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS